8 Stock File

## உறுப்பினர் செயலர் (பொறுப்பு) கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம் கும்பகோணம் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள்

முன்னிலை:திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

ந.க.எண்:**733/2018**குஉதிகு நாள்: 08**.04.2019**

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் - 2017, தஞ்சாவூர் மாவட்டம் - கும்பகோணம் வட்டம் - கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், ஏரகரம் ஊராட்சி/கிராமம், புல எண்:83/1B, 84/1B, 3, 4B1, 4B2, 4B3-ல் 275020.00சதுரஅடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற அன்பு நகர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் - வழங்கப்படுகிறது.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்: 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:13.10.2017.
3. அரசாணை (நிலை) எண்: 55, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:02.05.2018.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறை கடிதம், ந.க.எண்.13193/2017/எல்ஏ2, நாள்:30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 20.12.2017 மற்றும் 07.01.2019.
5. மனுதாரர்.R.சரவணன், K.ஆனந்தன், K.அன்பழகன், எண்.43, 8-வது தெரு, அண்ணா நகர், விளார் ரோடு, தஞ்சாவூர் -6, அவர்களின் விண்ணப்பம், நாள்:இல்லை.

-------

**உத்தரவு:**

பார்வை (1), (2) மற்றும் (3)-ல் கண்ட அரசாணைகளின்படியும் பார்வை(4)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி பார்வை (5)-ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

கும்பகோணம் உள்ளூர் திட்டக் குழுமம் - கும்பகோணம் வட்டம் - கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம் - ஏரகரம் ஊராட்சி/கிராமம், புல எண்:83/1B, 84/1B, 3, 4B1, 4B2, 4B3-ல் 275020.00சதுரஅடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற அன்பு நகர் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ./ந.ஊ.இ/குஉதிகு எண்:**19/2019**-என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : 275020.00சதுரஅடி |
| மொத்த மனைகள் | : 75 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : (3, 4, 7pt, 13-22, 24-34, 37-47, 50-54, 56-69, 70pt, 71, 72, 73pt, 74-76) |

விற்கப்பட்ட மனை எண்கள் : 3, 4, 7pt, 13-22, 24-34, 37-47, 50-54, 56-69, 70pt, 71, 72, 73pt, 74-76

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : (2, 5, 6, 7pt, 8-12, 23, 35, 36, 48, 49, 55, 70pt, 73pt)

விற்கப்படாத மனை எண்கள் : 2, 5, 6, 7pt, 8-12, 23, 35, 36, 48, 49, 55, 70pt, 73pt

விற்கப்பட்ட மனைகளின் பரப்பளவு : 148696.25சதுரஅடி
விற்கப்படாத மனைகளின் பரப்பளவு : 72987.97சதுரஅடி
OSR பரப்பளவு : 7299.00சதுரஅடி – 10%.

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டது:

மனைப்பிரிவு சாலை : 50335.78சதுரஅடி
பொது உபயோகம் : 3000.00சதுரஅடி – 4.11%

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டியவை:

பூங்கா : 4328.00சதுரஅடி – 5.93%

செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்:

1. பரிசீலனைக் கட்டணம்:

| | |
|---|---|
| இணைய தளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/-வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம்: மனை எண்: 1, 2, 5, 6, 7N, 7N, 8, 9, 11, 12, 23, 35, 36, 48, 49, 55, 73N, 10 | DTCP/L/0063086/2017<br>நாள்: 15.03.2018<br>17X500 =ரூ.8500.00/- |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

2. வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைபடுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30ரூபாய் வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25ரூபாய் வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| உதாரணமாக மனை எண்:14 | 222.97ச.மீ. | 222.97ச.மீ.x30=ரூ.6689.10/-<br>Say ரூ.6700.00/- | 222.97ச.மீ.x25=ரூ.5574.25/-<br>Say ரூ.5600.00/- |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைபடுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| **<u>Regularisation charges Head of Account:</u>**<br>**0217 - Urban Development**<br>**60 - Other Urban Development Schemes**<br>**800 - Others Receipts**<br>**AT - Receipts under Regularisation Charges of Unapproved Layouts and plot-DTCP 27 Non Taxation Fees 30 Regularisation (DPC: 0217-60-800-AT-2730).** | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை(1) மற்றும் (2)-ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்:</u>

1) அரசாணை (நிலை) எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:13.10.2017-ல் விதி எண்:7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு(OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறிப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர்(பொறுப்பு),
கும்பகோணம் உள்ளூர் திட்டக் குழுமம்,
கும்பகோணம்.

<u>இணைப்பு:</u>
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

<u>பெறுநர்:</u>
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.),
கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம்,
கும்பகோணம்.

நகல்:

மனுதாரர்:

R.சரவணன், த/பெ.ராமையா - 1,
K.ஆனந்தன், த/பெ.காளையார் - 2,
K.அன்பழகன், த/பெ.குழந்தைவேல் - 3,
எண்.43, 8-வது தெரு,
அண்ணா நகர்,
விளார் ரோடு,
தஞ்சாவூர் -6

| | |
|---|---|
| 2)உதவி இயக்குநர், நிலஅளவை பதிவேடு துறை, மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் மாவட்டம். | சாலை மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு |
| 3)சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம். | சாலை மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சி பெயரில் பதிவு செய்யும் பொருட்டு |

<u>கும்பகோணம் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்</u>
<u>முன்னிலை : திரு.ஆர்.நாராயணன், பி.எஸ்.சி.,</u>

ந.க.எண்.3044/2018/ஆ2 நாள்..23.06.2020

பொருள் : மனை வரன்முறை - கும்பகோணம் உள்ளூர் திட்டக்குழுமம் - கும்பகோணம் வட்டம் ஏரகரம் ஊராட்சி - கிராமம் புல எண்கள். 83/1B,84/1B,3,4B1,4B2,4B3-ல் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவை முறைப்படுத்தி உறுப்பினர் செயலர்,உள்ளூர் திட்டக்குழுமம்,கும்பகோணம் அவர்களின் கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்த வரைபடத்தில் அன்புநகரில் 17 மனை எண்கள்.2,5,6,7Pt,8-12,23,35,36,48,49,55,70Pt,73Pt வரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை நிலை எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை [UD4 (3)] நாள்.04.05.2017
2. அரசாணை எண்.172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை [UD4 (3)]நாள்.13.10.2017.
3. அரசாணை நிலை எண்.55, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை [UD4 (3)] நாள்.02.05.2018
4. மனுதாரர்.திரு.R.சரவணன்,திரு.K.ஆனந்தன்,திரு.K.அன்பழகன், 43,8வது தெரு,அண்ணாநகர்,விளார்ரோடு,தஞ்சாவூர். விண்ணப்பம் நாள்.08.06.2020.
5. உறுப்பினர் செயலர்,உள்ளூர் திட்டக்குழுமம்,கும்பகோணம் அவர்களின் கொள்கை அளவிலான ஒப்புதல் கடிதம் ந.க.எண்.733/2018/குஉதிகு நாள்..08.04.2019.
6. ஏரகரம் ஊராட்சி மன்ற தலைவர் தீர்மானம் எண் -21 நாள் - 08.06.2020.
7. ஏரகரம் ஊராட்சி மன்ற தலைவர் கடித நாள் - 23.06.2020.

******

ஆணை :

கும்பகோணம் வட்டம், ஏரகரம் ஊராட்சி கிராமம் புல எண்கள். 83/1B,84/1B,3,4B1,4B2,4B3-ல் அமைந்துள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவை முறைப்படுத்தி பார்வை 5ல் கண்டுள்ள உறுப்பினர் செயலர்,உள்ளூர் திட்டக்குழுமம்,கும்பகோணம் அவர்களின் செயலாணையில் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 6 & 7 ல் காணும் ஏரகரம் ஊராட்சி மன்றத் தலைவரின் கடித்தின்படி மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள அன்புநகரில் 17 மனை எண்கள்.2,5,6,7Pt,8-12,23,35, 36,48,49,55,70Pt,73Pt உரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

அ. வரன்முறைக் கட்டணம் 6381 சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் ரூ.1,91,430/- (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஒன்றாயிரத்து நானூற்று முப்பது மட்டும்) கும்பகோணம் பாரத மாநில வங்கியில் 13.03.2020-ல் செலுத்தப்பட்டுள்ளது.

13

ஆ. வளர்ச்சிக்கட்டணம் 6381 சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் ரூ.1,59,525/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து ஐநூற்று இருபத்து ஐந்து மட்டும்) மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் அவர்களின் வங்கி கணக்கில் 13.03.2020-ல் செலுத்தப்பட்டு விதிமுறைகளின்படி ஊராட்சி தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது என்ற விபரம் பார்வை 7ல் காணும் கடிதவழி ஏரகரம் ஊராட்சி மன்ற தலைவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2)எனவே கட்டணங்கள் யாவும் பெறப்பட்டதால் ஏரகரம் ஊராட்சி கிராமம் புல எண்கள். 83/1B,84/1B,3,4B1,4B2,4B3-ல் உறுப்பினர் செயலர்,உள்ளூர் திட்டக்குழுமம்,கும்பகோணம் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அன்புநகரில் உள்ள 17 மனை எண்கள்.2,5,6,7Pt,8-12,23,35,36,48,49,55,70Pt,73Pt பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தி இதன் வழி ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. நில உரிமம், மனை அளவுகள், அணுகுசாலை ஆகிய விபரங்களை ஊராட்சியால் உறுதி செய்து கொள்ளப்படல் வேண்டும்.
2. மனைப்பிரிவின் ஊடே உயர் அழுத்த மின்கோபுர பாதை செல்லுமாயின் அம்மனை வரன்முறை எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும்.
3. மனையிடத்திற்கு மின்பாதைகளுக்கும் இடையே குறைந்தபட்ச இடைவெளி மின்துறை வழிகாட்டுதலின்படி நிலைநிறுத்தப்படல் வேண்டும்.
4. மனையின் ஊடே போக்கு கால்வாய் செல்லுமாயின் அதற்கு இடையூறு இன்றி நீர்நிலை பாதுகாக்கப்படல் வேண்டும்.
5. திட்ட சாலையை பாதிக்கும் அனைத்து இனங்களுக்கும் இவ்வுத்தரவு பொருந்தாது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
கும்பகோணம்.
23/6/2020

பெறுநர் :
திரு.R.சரவணன்,
திரு.K.ஆனந்தன்,
திரு.K.அன்பழகன்,
43,8வது தெரு,
அண்ணாநகர்,விளார்ரோடு,
தஞ்சாவூர்.

நகல் :
1. ஊராட்சி மன்ற தலைவர், ஏரகரம்.
1. உறுப்பினர் செயலர்,உள்ளூர் திட்டக்குழுமம்,கும்பகோணம்
2. சார்பதிவாளர், கும்பகோணம்.